# 9. விருந்தோம்பல்

## (புதியவராக வருவோரைப் பேணுதல்)

## Cherishing Guests

**81. இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

இல்லத்தில் தங்கியிருந்து குடும்ப நலம் பேணி வாழ்க்கை நடத்துவதன் நோக்கம் என்னவென்றால், தம்மை நாடிவரும் புதியவரைத் தக்கவாறு பேணி அவருக்குத் தேவையான உதவி புரிவது ஆகும்.

**All household cares and course of daily life have this in view**
**Guests to receive with courtesy, and kindly acts to do.**

The whole design of living in the domestic state and laying up (property) is (to be able) to exercise the benevolence of hospitality.

**82. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று.**

வீட்டுக்கு வந்த விருந்தினரை வெளியே அமரச் செய்துவிட்டு, தான் மட்டும் வீட்டின் உள்ளே இருந்து கொண்டு, சாவாமைக்குக் காரணமாகிய மருந்து என்று போற்றப்படும் அமிழ்தத்தைக் கூடத் தனியே உண்பது விரும்பத்தக்க பண்பாடு ஆகாது!

**Though food of immortality should crown the board,**
**Feasting alone, the guests without unfed, is thing abhorred.**

It is not fit that one should wish his guests to be outside (his house) even though he were eating the food of immortality.

**83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று.**

விருந்தினரை நாள்தோறும் வரவேற்றுப் பேணிப் போற்று பவரின் வாழ்வு, வறுமைத் துன்பத்தால் ஒருபோதும் கெட்டுப் போகாது!

**Each day he tends the coming guest with kindly care;**
**Painless, unfailing plenty shall his household share.**

The domestic life of the man that daily entertains the guests who come to him shall not be laid waste by poverty.

**84. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து**
**நல்விருந்(து) ஓம்புவான் இல்.**

அகமும் முகமும் மலர விருந்தினரைத் தக்கவாறு பேணிப் போற்றுபவன் வீட்டில் செல்வம் என்னும் திருமகள் மகிழ்ச்சியோடு தங்கி இருப்பாள்.

**With smiling face he entertains each virtuous guest,**
**'Fortune' with gladsome mind shall in his dwelling rest.**

Lakshmi with joyous mind shall dwell in the house of that man who, with cheerful countenance, entertains the good as guests.

**85. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்.**

வீட்டுக்கு வந்த விருந்தினர்க்கு வயிறார உணவு நல்கிவிட்டு எஞ்சியுள்ள உணவை உண்டு மகிழும் இயல்புடைய பண்பாளன், விதை நெல்லையும் கூட விருந்து பேணுவதற்குப் பயன்படுத்தத் தயங்கமாட்டான்!

**Who first regales his guest, and then himself supplies,**
**O'er all his fields, unsown, shall plenteous harvests rise.**

Is it necessary to sow the field of the man who, having feasted his guests, eats what may remain ?.

**86. செல்விருந்(து) ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.**

வீட்டுக்கு வந்த விருந்தினரைப் பேணிப் போற்றி, மேலும் வரும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருப்பவன் மேலான வானகத்தவர் விரும்பி வரவேற்றுப் போற்றும் சிறந்த விருந்தினன் ஆவான்.

**The guest arrived he tends, the coming guest expects to see;**
**To those in heavenly homes that dwell a welcome guest is he.**

He who, having entertained the guests that have come, looks out for others who may yet come, will be a welcome guest to the inhabitants of heaven.

**87. இனைத்துணைத்து என்பதொன்(று) இல்லை; விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்.**

விருந்தினரைப் பேணிப் போற்றுவதால் ஏற்படும் பயனை அளவிட்டுக் கூறவியலாது. விருந்தினராக வருவோரின் தகுதியைக் கொண்டே அதனை மதிப்பிட வேண்டும்.

**To reckon up the fruit of kindly deeds were all in vain;**
**Their worth is as the worth of guests you entertain.**

The advantages of benevolence cannot be measured; the measure (of the virtue) of the guests (entertained) is the only measure.

**88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**
**வேள்வி தலைப்படா தார்.**

விருந்தினரை வரவேற்றுப் போற்றும் ஈடுபாடு இல்லாதவரே, பொருளை வருந்திக் காத்துப் பயன் பெறாது இழந்து போகும்போது பெரிதும் கவலை கொள்வர்.

**With pain they guard their stores, yet 'All forlorn are we,' they'll cry,**
**Who cherish not their guests, nor kindly help supply.**

Those who have taken no part in the benevolence of hospitality shall (at length lament) saying, "we have laboured and laid up wealth and are now without support.".

**89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு.**

செல்வம் மிக்கவராக விளங்கும்போதே வறுமை உடையவராக அமைவது என்பது விருந்தினரைப் பேணாத அறியாமையாகும்: இந்த அறிவற்றவரே செல்வம் இருந்தும் வறியவராகக் கருதப்படுவர்!

**To turn from guests is penury, though worldly goods abound;**
**'Tis senseless folly, only with the senseless found.**

That stupidity which excercises no hospitality is poverty in the midst of wealth. It is the property of the stupid.

**90. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**

மலர்களில் மென்மை மிக்க அனிச்சப்பூ அதனை மூக்கால் நுகரும்போதே வாடிவிடும்: வீட்டுக்கு வரும் விருந்தினரை முக மலர்ச்சியோடு வரவேற்காவிட்டால் அவர்கள் பெரிதும் வருந்துவர்!

**The flower of 'Anicha' withers away, If you do but its fragrance inhale;**
**If the face of the host cold welcome convey, The guest's heart within him will fail.**

As the Anicham flower fades in smelling, so fades the guest when the face is turned away.